### புதுச்சேரி - தட்டாஞ்சாவடி தொகுதியில்

# தி.மு.க.வுக்கு கிடைக்கும் வெற்றி தமிழ்நாட்டிற்கும் வழிகாட்டியாக அமையும்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி சூளுரை!





புதுச்சேரி, செப். 22 -

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆசிபெற்ற தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல் தி.மு.க. வேட்பாளர் கு.சேது (எ) சேதுசெல்வம் அவர்களுக்கு தீவிர வாக்கு சேகரிக்கும் பணிக்காக தட்டாஞ்சாவடி தொகுதியில் உள்ள 31 பூத்களுக்கும் பூத் கமிட்டி அமைக்கப்பட்டு, பூத் கமிட்டி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் அக்கார்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளரும், புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளரும் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர் க. பொன்முடி, புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர் டாக்டர் ஆ. இலட்சுமணன் எம்.எல்.ஏ., விழுப் புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் பொன். கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. செந்தில்குமார், வே. கார்த்திகேயன், விக்னேஷ் கண்ணன், வானூர் சட்டமன்ற உறுப்பினர் கௌதம் திராவிட மணி, அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தட்டஞ்சாவடி தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வெற்றிக்காக எவ்வாறு செயல்படுவது என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர். கூட்டத்தில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, நகர, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பேசிய கழக துணைப் பொதுச் செயலாளர் க. பொன்முடி, புதுச்சேரி தட்டாஞ்சாவடி இடைத் தேர்தலை விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும் தேர்தலைப் போல கருதி தி.மு.க. நிர்வாகிகள் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு கட்சி நிர்வாகியும் தலா 20 வாக்குகளை உறுதி செய்தாலே தேர்தலில் எளிதாக வெற்றி பெற முடியும் என்றார். தேர்தலில் தி.மு.க. சந்திக்காத வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை என்றும் கூறினார். மேலும், தட்டாஞ்சாவடி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை கட்டாயம் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என நிர்வாகி களிடம் பொன்முடி வலியுறுத்தினார்.

புதுச்சேரி முன்பு திமுகவின் கோட்டையாக விளங்கிய பகுதி எனக் குறிப்பிட்ட பொன்முடி, புதுச்சேரியை மீண்டும் தி.மு.க.வின் கோட்டையாக மாற்றுவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். 20 முதல் 30 ஆண்டுகளுக்கு முன்பு புதுச்சேரிக்கு அடிக்கடி வந்து சென்றதாகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் தனக்கு அரசியல் கற்றுக்கொடுத்த இடமாக புதுச்சேரி இருந்ததாகவும் அவர் தெரிவித்தார். புதுச்சேரியில் திமுக நிர்வாகிகளான எஸ். ஜெகத்ரட்சகன் மற்றும் இரா. சிவா ஆகியோர் கட்சியை சிறப்பாக வழி நடத்தி வருவதாகவும் பொன்முடி கூறினார்.

தட்டாஞ்சாவடி இடைத் தேர்தல் பிரச்சாரப் பணிகள் மற்றும் வாக்கு சேகரிப்பில் கட்சி நிர்வாகி கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்திய பொன்முடி, தேர்தலுக்கு எஞ்சியுள்ள அடுத்த 14 நாட்களும் முக்கிய மானவை என்றார். தமிழ்நாட்டில் நடைபெறும் இரண்டு இடைத்தேர்தல்களில் திமுக வெற்றி பெற்றால், மு.க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சராக வருவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அதேபோல், புதுச்சேரி தட்டாஞ்சாவடி இடைத்தேர்தலிலும் திமுக வெற்றி பெறுவது அரசியல் மாற்றத்துக்கு வழிவகுக்கும் என கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. கூறியிருப்பதை சுட்டிக் காட்டிய பொன்முடி, தட்டாஞ்சாவடி வெற்றியை திமுக நிர்வாகிகள் உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

புதுச்சேரியில் தி.மு.க.வுக்கு கிடைக்கும் வெற்றி தமிழ்நாட்டிற்கும் வழிகாட்டியாக அமையும் எனக் குறிப்பிட்ட அவர், தட்டாஞ்சாவடி தொகுதியை மீண்டும் தி.மு.க.வின் செல்வாக்கு மிக்க தொகுதியாக மாற்ற கட்சி நிர்வாகிகள் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என வலியுறுத்தினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி.,

புதுச்சேரியில் திமுக வேட்பாளர் வெற்றி பெற்றால் மாநில அந்தஸ்து நிச்சயம் கிடைக்கும். தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றால் புதுச்சேரியில் நிச்சயமாக அரசியல் மாற்றம் வரும். தட்டாஞ்சாவடி தொகுதியில் செல்லும் இடமெல்லாம் தி.மு.க. வேட்பாளருக்கு மக்கள் அமோக வரவேற்பு அளிக்கின்றனர். புதுச்சேரியில் ஆளும் பா.ஜ.க. என்.ஆர்.காங்கிரஸ் ஆட்சியில் வேலைவாய்ப்பு முற்றிலும் இல்லை. புதிய தொழிற்சாலைகள் கொண்டுவரப்படவில்லை. மூடப்பட்ட பஞ்சாலைகள் திறக்கப்பட வில்லை. விமான நிலைய நிர்வாகத்திற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதுச்சேரியில் படித்த இளைஞர்கள் வேலை தேடி வெளி மாநிலங்களுக்கு செல்ல வேண்டிய சூழல் உள்ளது. மூடப்பட்டுள்ள லிங்காரெட்டி பாளையம் சர்க்கரை ஆலையை திறக்க முடியவில்லை. கடந்த 10 வருடங்களாக மத்தியில் மாநிலத்திலும் ஒரே ஆட்சி இருந்தபோதிலும் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கிடைக்கவில்லை. கூட்டணியில் இருந்த போதும் கூடுதல் நிதி பெற முடியவில்லை என குற்றம் சாட்டினார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு ஆலோசனைபடி, சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணிக்கு ஒதுக்கப்பட்டுள்ள அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம், வெள்ளப்புத்தூர் ஊராட்சி, பாகம் எண் 43க்குட்பட்ட தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கிளைக் கழகச் செயலாளர், BLA2, அணிகளின் நிர்வாகிகள் மற்றும் BLC உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்துத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வது குறித்தும், கழகத்தின் வெற்றிக்காக ஒற்றுமையுடன் களப்பணியாற்றுவது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் யோகேஸ்வரி சுந்தரேசன், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் லதா பிளாரன்ஸ், மாணவர் அணி பகுதி அமைப்பாளர் ஜி.எம்.ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# மதுராந்தகத்தில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க - மா.சுப்பிரமணியன் தீவிரப் பிரச்சாரம்!



மதுராந்தகம், செப்.22-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.கழக வேட்பாளர் இ. பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு சென்னைத் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிக் கழக செயலாளர்கள் ஒன்பது பேர் மற்றும் ஒன்றியக் கழகங்களின் செயலாளர்கள் இரண்டு பேர் தலைமையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் - மேனாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட சிதண்டி, மெய்யூர், வடபாதிமங்கலம், மாமண்டூர், பழமத்தூர் ஆகிய ஐந்து ஊராட்சிகளில் உள்ள 13 பாகங்களிலும் நேற்று (20-9-2026) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் தொடங்கி, இரவு 9 மணிவரை அனல்பறக்கும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில், பொதுமக்களின் உற்சாகமான வரவேற்பில் சிறப்பான வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

பிலாப்பூர் ஊராட்சிக்குட்பட்ட பாகத்தில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழகத்தின் செயலாளர் எஸ்.அரவிந்த்ரமேஷ் தலைமையில் வீடுகள் தோறும் சென்று வாக்காளர்களைச் சந்தித்து தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதிக்குட்பட்ட இ.தனசேகரன், கே.டி.ரவி, வி.வி.குமரேசன், ப.பாபு, எஃப். ஆரோன் (எ) அரசு, ஜி.ரவி, டி.ராஜேந்திரன், பா.தேவக்குமார், ஜி.சங்கர், ஆர்.நாகராஜ் உள்ளிட்ட தி.மு.கழகத் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

சிதண்டி ஊராட்சிக்குட்பட்ட இரண்டு பாகங்களில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் உள்ள இல்லங்கள் தோறும் வாக்காளர்களை வேளச்சேரி கிழக்குப் பகுதி கழக செயலாளர் எம்.விநாயகமூர்த்தி மற்றும் வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் வே.ஆனந்தம் ஆகியோர் தலைமையில் வாக்குச்சேகரிக்கப்பட்டது. இந்த வாக்குச் சேரிப்பில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பளித்தனர். இந்த வாக்குச் சேகரிப்பில் வேளச்சேரி கிழக்குப் பகுதி கழகத்தின் நிர்வாகிகள் துரை.கபிலன், அடையார் சி.சுரேஷ், முகேஷ்கண்ணன், சந்திரேஷ், விசாலாட்சி கபிலன், பாலாஜி, பெ.ராஜி, தமிழரசு, பாண்டியன், தனசேகர், கணேஷ்குமார், வி.எம்.டி. ராஜாரமணன், வேளச்சேரி மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் வேளச்சேரி பெ.மணிமாறன், கழக த.ரமேஷ், வழக்கறிஞர் ஜெகதீசன், எழில்வா ணன், நா.டில்லிகுமார், பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், ஜி.பி.எஸ். பாலசதீஷ், கே.என்.தாமோதரன், எஸ்.முருகவேல், தே.கோபி, த.பாரதிதாசன், வி.சக்திவேல் உள்ளிட்ட நிர்வாகிகளுடன் தி.மு.கழகத் தொண்டர்களும் பங்கேற்று தீவிரமாக வாக்குச் சேகரித்தனர்.

மெய்யூர் ஊராட்சிக்குட்பட்ட மூன்று பாகங்களில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் உள்ள வீடுக ள்தோறும் வாக்காளர்களை பகுதி கழக செயலாளர்கள் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் கணபதி, மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் மற்றும் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் துரை.வீரமணி ஆகியோர் தலைமையில் பொதுமக்களைச் சந்தித்து சிறப்பான வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகத்தின் நிர்வாகிகள் எஸ். அருணாச்சலம், வா.செல்வக்குமார், பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா. பால்பாண்டியன், எஸ். பாரதி, கே.ராஜி, பெ.ரவி, எஸ்.ரமேஷ்ராஜ், பி.சுந்தர், ஜெ.பாஸ்கரன், பி.சார்லஸ், ராதாசெல்வம், மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ஜி.மாதவன், ப. ஆலன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிக்குமார், எம்.இ. ஸ்டாலின், எம்.ரூபன், ஆர். கர்னல், தி.பாலாஜி மற்றும் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகத்தின் நிர்வாகிகள் கமலக்கண்ணன், ரமேஷ், தங்கபிரகாசம், அன்பழகன், தமிழரசன், செல்வக்குமார், நாராயணன், பொற்செல்வி, பாஞ்சாலம், ரவி உள்ளிட்ட கழகத் தொண்டர்களும் இணைந்து இடைவிடாது பொதுமக்களைச் சந்தித்து த.வெ.க ஆட்சியின் அவலங்களை எடுத்துரைத்து வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

வடபாதிமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட அனைத்துத் தெருக்களிலும் உள்ள வீடுகள் தோறும் கலைஞர் நகர் வடக்குப் பகுதி கழக செயலாளர் மு.ராஜா, கலைஞர் நகர் தெற்குப் பகுதி கழக செயலாளர் கே.கண்ணன் மற்றும் தாமஸ்மலை ஒன்றியக் கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் வாக்காளர்களை சந்தித்து திராவிட மாடல் ஆட்சியில் மேனாள் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றிய தமிழ்நாட்டின் முன்னோடித் திட்டங்களை விளக்கி வாக்குச்சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த தீவிர வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் கலைஞர்நகர் வடக்குப் பகுதியின் நிர்வாகிகள் க. தனசேகரன், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கோவிந்தராஜன், வி.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், பாபு, லோகு, பாஸ்கரன், விஜயகுமார், ஆர். பாஸ்கர், சீனிவாசன், நல்லேந்திரன், பிரகாஷ், ராமச்சந்திரன், த.நாகராஜன், பூங்குழலி, கலைஞர்நகர் தெற்குப் பகுதிக் கழகத்தின் நிர்வாகிகள் வாசுகிபாண்டியன், இரா.செழியன், பூக்கடை பழனிச்சாமி, பி.கே. குமார், செந்தில்குமார், சதீஷ்கண்ணன், ஜம்புமுருகன், ஆர்.சசிக்குமார், கனிமொழிதனசேகரன், நிஷா சையத், முருகன், சக்கரவர்த்தி, அசோக், சபரி, ராஜேந்திரன், பால்சாமி, தினேஷ், தென்னரசு, சமயன், சசி, மணிகண்டன், சண்முகம், சுதா, சுபா, பச்சையப்பன், மகேஷ், கமலக்கண்ணன், தர்மராஜ், லட்சுமி, ஜெகதீசன் மற்றும் தாமஸ்மலை ஒன்றியக் கழகத்தின் நிர்வாகிகள் சங்கீதா பாரதிதாசன், எஸ்.ரவி, எச். டி.போஸ், ஜெ.இ.மனோநிதி, டில்லிபாபு, ஜெ.இ. பாண்டியன், வேதகிரி, எம். சி.மூர்த்தி, கே.குமார், சொக்கலிங்கம், ஜெயச்சந்திரன், லோகேஷ் உள்ளிட்ட தி.மு.கழக உடன்பிறப்புகள் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

மாமண்டூர் ஊராட்சிக்குட்பட்ட ஐந்து பாகங்களிலும் உள்ள அனைத்து வீடுகளிலும் உள்ள வாக்காளர்களைச் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சியின் தமிழ்நாட்டின் பொருளாதார மாற்றங்களையும், தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக மாற்றுவதற்கு நிறைவேற்றப்பட்ட திராவிட மாடல் அரசின் திட்டங்களை விளக்கி, சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளர் வி.இ.மதியழகன் ஆகியோர் தலைமையில் அனல் பறக்கும் தீவிர வாக்குச் சேகரிப்பு நிகழ்வில் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழகத்தின் நிர்வாகிகள் தேவராஜன், டேவிட்சவுந்தர்ராஜன், சுரேஷ், திவாகர், குமாரசாமி, மணிகண்டன், ம.ஆறுமுகம், ராஜேஷ், கே.பாலகிருஷ்ணன், ராமமூர்த்தி மற்றும் சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகத்தின் நிர்வாகிகள் பாலவாக்கம் க. சோமு, பாலவாக்கம் த.விசுவநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், க.ஏகாம்பரம், வி. சாந்தப்பன், கி.சத்திய வேலன், ஏ.கே.ஆனந்த், பி.என். ஜோதி, ஜி.விஜயகுமார், எம்.பாஸ்கரன் உள்ளிட்ட தி.மு.கழகத்தின் தொண்டர்கள் புடைசூழ கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெற செய்யவேண்டுமாய் வீடுகள்தோறும் உள்ள வாக்காளர்களைச் சந்தித்து எடுத்துரைத்தனர்.

பழமத்தூர் ஊராட்சிக்குட்பட்ட இரண்டு பாகங்களிலும் உள்ள அனைத்துத் தெருக்களிலும் உள்ள வீடுகள்தோறும் சைதை மேற்குப் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் சைதை கிழக்குப் பகுதி கழக செயலாளர் இரா. துரைராஜ் ஆகியோர் தலைமையில் த.வெ.க ஆட்சியின் அவலங்களையும், திசைமாறிச் சென்றுகொண்டிருக்கும் தமிழ்நாட்டின் அரசியல் சீர்கேட்டின் நிலையை விளக்கி, திராவிட மாடல் ஆட்சியின் சிறப்புகளை கொண்டுசேர்க்கும் வண்ணம், மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிவேட்பாளர் இ.பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் பொதுமக்களிடம் தீவிரமாகச் வாக்குச் சேகரிக்கப்பட்டது.

இந்த வாக்குச்சேகரிப்பு நிகழ்ச்சியில் சைதை மேற்கு பகுதி நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், டி.என். சிவமணி, த.சம்பத், ஆர். ரமேஷ், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எம்.நாகா, எஸ்.பி. கோதண்டம், கு.புகழ்வேந்தன், சைதை கிழக்குப் பகுதியின் நிர்வாகிகள் எஸ். குணசேகரன், தா.மோகன்குமார், முருகன், ஆரி, ஜி.வரதன், க.மணி, பெ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, உமாபதி, சலாம், மஜீத், மகேஷ்லாரன்ஸ், ரமேஷ்குமார் உள்ளிட்ட தி.மு.கழகத்தின் உடன்பிறப்புகள் புடைசூழ வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி சென்னைத் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் சிறப்பாக நடந்தேறியது. இன்று தேர்தல் பிரச்சாரம் தொடங்கப்பட்ட முதல் நாளே பொது மக்களிடம் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கு சிறப்பான வரவேற்பு அளித்து, வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு அனுப்பி வைப்போம் என்ற உறுதியை அளித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.முத்துக்குமார்

### செப்டம்பர் 22 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து கோவை பகுதியில் கழகம் வளரபாடுபட்டவர்.

1953ஆம் ஆண்டு கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று கலந்து கொண்டதற்காக தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் இருந்தபோது, மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, “எனது உயிரற்ற உடல் வேண்டுமானால் வெளியே வரும். ஆனால், நான் மன்னிப்பு கேட்டு வெளியே வரமாட்டேன்.” என்ற முழக்கமிட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

சிறைவாசம் முடிந்து விடுதலை அடைந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறைவாசலில் வந்து வரவேற்ற பெருமைக்குரியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு மு. நடராசன்

### செப்டம்பர் 22 (2004)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**